

# பரலோக பொக்கிஷங்கள்

*உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!*

## ‘தனிமை நீங்கி’ தேவனோடிருப்பதே, ஜெய ஜீவியம்!

உலக ஆஸ்தி, அந்தஸ்துகளுக்காகப் போராடி அதை சொந்தமாக்கிட நாடும் மாந்தர்களே ஏராளம்! அனைத்தையும் போராடி வென்றும் **‘தேவன் இல்லாத’ தனிமை** வாழ்க்கையே யாக்கோபிற்கு எஞ்சியது! (ஆதி.32:24). அதை உணர்ந்த **யாக்கோபு,** தன்னை சந்தித்த தேவனை, எப்படியாகிலும் சுதந்தரித்துக்கொள்ள அவரோடு போராடி “அவரை தனக்கென வென்றான்!” (வச.28). ‘தனித்திருந்த’ யாக்கோபு, இப்போது தேவனை சுதந்தரித்து, தனிமை நீங்கி ‘இஸ்ரவேல்’ என பெயர் பெற்று, தேவனை மையமாய் கொண்ட ‘கோத்திர பிதாவாய்’ மாறினான்!

நம் ஜீவ காலமெல்லாம் “தேவனை விட்டு விலகாத” ஜீவியத்திற்காய் போராடக்கடவோம்! அதுவே, நம் விசுவாச ஜீவியத்தின், நல்ல போராட்டம்!

_tr



## மரியாளின் 'தாழ்மை சிங்காரம்' நமக்கும் உரித்தாகுக!

ஒரு சமயம், உலகிலேயே ஓர் அதி முக்கிய பணிக்கு தேவனுடைய கண்கள் இந்த பூமியை தீவிரமாய் தேடியபோது, "மரியாளிடம்" தேவன் எதிர்பார்த்த உண்மையான தாழ்மை அவளது உள்ளத்தில் நிறைவாய் இருந்ததை கண்டார்! எனவேதான் தன் ஒரேபேறான மைந்தன் இயேசு கிறிஸ்துவைப் பெற்றெடுக்கும் பாக்கியத்திற்கு இந்த மரியாளே தகுதியுள்ளவள் என்பதை திடமாய் உறுதிசெய்தார். இந்த சமயத்தில் தேவனுக்கு துதிபாடிய மரியாள், "அவர் தம்முடைய அடிமையின் தாழ்மையை நோக்கிப் பார்த்தார்" என பாடி மகிழ்ந்து பூரித்துப்போனாள்!! இந்த மரியாளைப் பாருங்கள்.... தான் பிரசவிக்க சத்திரத்தில் இடமில்லாமற்போனாலும், தான் பிரசவித்த சிசுவோடு மாட்டுத் தொழுவத்தின் வைக்கோல் புல்லின்மேல் படுக்க நேர்ந்தாலும், **தனக்கு "ஏற்ற இடம்" கிடைத்தது என்றே அறிந்து நிறைவுற்றிருந்தாள். இதைவிட மேலானதொன்றிற்காய் ஏங்கி அங்கலாய்க்கவே இல்லை!** இவ்வித தாழ்மையின் சிங்காரத்திற்குள் தேவன் தன்னை வைத்திட்டாரே என்றே தேவன்பால் நன்றியுடன் உள்ளம் உவந்தாள்!

இன்றோ, தாங்கள் தாழ்மையற்றவர்களாய் இருந்தும், தங்களைத் தாங்களே தாழ்மை உள்ளவர்களாக எண்ணிக் கொள்பவர்களே ஏராளமாய் உள்ளனர்! ஆனால், அவர்களின் பேச்சுக்களும், செய்கைகளும் அவர்களின் உண்மை லட்சணம் 'தாழ்மையின் சிங்காரம்' அல்ல என்பதை வெளிப்படுத்தி காண்பிக்கிறது!

*-Ed*

**2021 'பரலோக பொக்கிஷங்கள்' – வருட சந்தா ரூ.150.00**

*சந்தா புதுப்பிக்காதவர்கள் ஜனவரி 20-ம் தேதிக்குள் அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் 3 பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.**125.00** அனுப்புங்கள். அயல்நாடு ஒரு பிரதி ரூ.**900/-** அனுப்ப வேண்டும். புதுப்பித்துக் கொள்பவர்கள், தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும், புதிதாய் வாங்குபவர்கள் '**புதிது**' என்று குறிப்பிடவும். நன்றி!*

**ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்!**
**அசல் உயர்த்தி போலி அகற்றும்!**
**சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!**

வங்கி கணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP,** Indian Bank - Koodal Nagar Branch
A/c no: **502087685** Ifsc code: IDIB000K150
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

கடித தொடர்பு : **PARALOGA POKKISHANGAL**, 207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.), Madurai - 625 018, S.India Cell : 9843049935 Ph: 0452 7966138
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : paralogapokkishangal

## ‘எந்தன் சிலுவையே’ எனது மேன்மை ஜீவியம்!

“**நா**ங்களோ *சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்; அவர் யூதருக்கு இடறலாயும்....” என தொடர்ந்து வாசிக்கிறோம் (1கொரி.1:23). கிறிஸ்து நமக்காக சிலுவையிலறையப்பட்டாரே, அதுவா இன்றைய கிறிஸ்தவ மார்க்கத்தாருக்கு இடறல்? இல்லை!* “**நாம் சிலுவையிலறையப் படுகிறோமே**” *அதுதான் இவர்களுக்கு இடறல். ஏனென்றால், இங்கு தான் நம் எல்லா சுயமும், அது எவ்வளவு அருமையாயிருந்தாலும் அல்லது எவ்வளவு லாபமாயிருந்தாலும் அவைகள் கொஞ்சமும் இரக்கமில்லாமல் புறக்கணித்துத் தள்ளப்படுகிறது! அதன் சுயமரியாதைக்கோ கிஞ்சித்தும் இடமே இல்லை!! ஆ, இங்கு தான் இவர்கள் கோபம் கொள்ளுகிறார்கள். தங்கள் பார்வையில் இவர்கள் எவ்வளவு திறமையாய் காணப்பட்டு, சுயத்தில் மகிழ்கிறார்களோ அவ்வளவு அதிகம் கோபக்கனலாகிறார்கள்!*

**ஆனால் உண்மை என்ன தெரியுமா? நமக்கு அருமையான இந்த எல்லா சுயமும் மரணத்திற்கே உரியது! அது கிறிஸ்து இயேசுவின் மூலமாய் சிலுவையில் அறையப்பட்டுவிட்டது!! அது இருக்க வேண்டிய இடம் அதுதான்!!**

*1கொரிந்தியர் 1:17-ம் வசனத்தில், “கிறிஸ்துவின் சிலுவை வீணாய் (அல்லது வல்லமையற்றுப் போகாதபடிக்கு).....” என்றும், 18-ம் வசனத்தில் “சிலுவையைப் பற்றிய உபதேசம்..... நமக்கோ அது தேவ பெலனாயிருக்கிறது” என்றும் வாசிக்கி றோம். சிலுவையின் உபதேசத்தில் அல்லது சிலுவையில் அப்படியென்ன வல்லமையிருக்கிறது என்று கேட்கிறீர்களா?*

*கேளுங்கள்: அது பழைய மனிதனுக்கும் அவன் கிரியை களுக்கும் சாவு மணி அடிக்கிறது! அவ்வல்லமை பாவத்தி லிருந்து விடுதலை அளிக்கிறது! மட்டுமல்ல, நாட்கள் செல்லச் செல்ல நாம் இனி பாவம் என அறிந்து கொள்ளப்போகும் எல்லாப் பாவத்திலிருந்தும் விடுதலையளிக்கிறது! சிலுவை வழங்கும் “தேவ பெலனைக் கண்டவன்” தன் சுய - சொந்த ஜீவனை திரும்பத் திரும்ப ‘அனுதினமும்’ அறைந்து வாழ்வான்!*

*ஆம்! அந்த ஆணிகள் சிலுவையிலறையப்பட்ட 'சுய' மனிதனை அவன் விரும்பும் இடத்திற்குப் போக முடியாமல் வலிமையாக சிலுவையின் மேல் இருத்தி வைக்கிறது.... பின்பு... கொஞ்சம் கொஞ்சமாய் சீக்கிரத்தில் அவன் செத்துப் போகிறான். இவ்வாறு மாம்சத்தின்படியான என்னை சாகடிக்கிறதே அதுதான் இச்சிலுவையின் வல்லமையான கிரியைகள்!!*

*"தன் சிலுவையைச் சுமந்துகொண்டு எனக்குப் பின் செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்க மாட்டான்" (லூக்கா 14:27) என இயேசு கூறினார். "அப்பொழுது அவரைச் சிலுவையில் அறையும்படிக்கு பிலாத்து அவர்களிடத்தில் ஒப்புக்கொடுத்தான். அவர்கள் இயேசுவைப் பிடித்துக்கொண்டு போனார்கள். அவர் தம்முடைய சிலுவையைச் சுமந்துகொண்டு.... கொல்கொதா என்ற இடத்திற்குப்* **புறப்பட்டுப்போனார்....**" *(யோவான் 19:16-17). தன் சிலுவையைச் சுமக்க வேண்டும் என்பதற்கு இதைவிட வேறு என்ன விளக்கம் வேண்டும்? அதாவது, நாம் சிலுவையிலறையப்படுவதற்கு எதிர்ப்பில்லாமல் வாய்ப்பு அளிக்கிறோமே, அதுதான் சரியான பொருள்! சிலுவையில் அறையப்படுவதன் அவசியத்தை உணர்ந்து கொண்டவர்கள் எவர்களோ, அவர்களே அதை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவார்கள்!*

*உதவாக்கரை குற்றவாளிகளே சிலுவையிலறையப்படுவார்கள்! தானே சிலுவையிலறையப்படுவதற்கு, தன் சிலுவையை சுமக்க யார் விரும்புவார்கள்? யாரெல்லாம் மாம்சத்தின்படியான தங்களை உதவாக்கரை குற்றவாளிகளாய் கண்டு, இப்போது அவனை ஒழித்துக் கட்டும்படி தங்களுக்கு வாய்ப்பு கிடைத்ததற்காக நன்றி சொல்கிறார் களோ, அவர்கள்!*

**தன் மகிழ்ச்சிக்கும், ஆவிக்குரிய வளர்ச்சிக்கும் தடைக்கல் தன் சுயமே என கண்டுபிடித்தவர்கள் தங்கள் மாம்சத்தை மகிழ்வுடன் சிலுவையில் அறைந்திட ஒப்புக்கொடுப்பார்கள்!**

*"சிலுவையின் நிழலுக்கு வாருங்கள்" எனறு பாடுவதை அதிகமாய் கேட்டிருக்கிறோம். ஆனால் வேதம் இவ்விதமான வார்த்தையை ஒரு இடத்தில்கூட குறிப்பிட்டுக் கூறவில்லையே! அதற்கு நேர்மாறாக "கிறிஸ்துவோடுகூட சிலுவையில் அறையப்படுங்கள்" அல்லது* **சிலுவையின்மேல் இருப்பதையே** *வேதவசனம் கூறுகிறது. 'ஒருவேளை' பாவமன்னிப்பை இச்சிலுவையின் நிழலில் பெற்றுக்கொள்ளலாம். ஆனால்* **பாவத்தின்மேல் ஜெயத்தை** *ஒருக்காலும் பெறவே முடியாது. அந்த ஜெயம், சிலுவையின் மேல்தான் பெற்றுக்கொள்ள முடியும்! சிலுவையின் கீழ் உள்ளவர்கள் பாவம் செய்ய முடியும். ஆனால்,*

சிலுவையின் மேல் உள்ளவர்களால் அது முடியாது! இந்த விசுவாசத்தின் இரகசியத்தைக் காணும்படி தேவன் இந்நாட்களில் அநேகருடைய கண்களைத் திறப்பாராக!

**அற்பமேயாயினும், மிகவும் அவசியமான ஆரம்பமாகிய கிறிஸ்து நமக்காக சிலுவையிலறையப்பட்டார் என்பதை உதாசீனம் செய்பவர்களும்; ஆனால் இந்த ஆரம்பத்தையே போற்றிப் புகழ்ந்து கிறிஸ்துவோடு தொடர்ச்சியாக சிலுவையிலறையப்படும் விந்தை அனுபவத்தை உதாசீனம் செய்து தள்ளுபவர்களும்; ஆகிய இவ்விருவருமே சரியான மதிகேடர்கள்!**

கிறிஸ்துவின் சிலுவை மாத்திரமே, என் நிஜவாழ்க்கையில் மேன்மை பாராட்டப்பட வேண்டும். ஏனென்றால், இச்சிலுவையில் தான், நம் பழைய மனிதன் ஒருநாள் சிலுவையிலறையப்பட்டான். இப்போது அதே சிலுவையில் நாம் அனைவருமே சிலுவையிலறையப் படுவது, அனுபவபூர்வமாய் உண்மையாகிறது! நாம் செய்ய வேண்டிய தெல்லாம், இப்போது சோதனை மூலம் தரப்படும் சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும், அவ்வளவுதான்!

இந்நாட்களில், தேவன்தாமே இம்மகிமையான விசுவாச இரகசியத்தை அநேக தவிக்கும் தாகமுள்ள ஆத்துமாக்களுக்கு வெளிப்படுத்துவாராக! ஆமென்.

*– எலியாஸ் அஸ்லாக்ஸன்*

---

## 'எளிமையே' சோம்பலற்ற கிறிஸ்தவத்தின் இரகசியம்!

ஆம், "கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக நமக்குள் இருப்பது" ஒன்றே, நமது பெலனாய் இருக்கிறது! (கொலோ.1:27). இந்த பாக்கியமான நிலையைப் பெற்றவன் "பிசாசுக்கு" ஒருபோதும் அஞ்சிடமாட்டான். ஒருவேளை, சாத்தான் என்னை சுளகில் வைத்து புடைத்திட தீர்மானிக்கலாம்...... நான் அறியாத பயங்கரங்களை என்மீது ஏவிவிடலாம்! அதினாலென்ன? "என்னோடு ஒன்றாய் இணைந்துள்ள **அந்தப் பெரியவரை** அவனால் என்ன செய்திட முடியும்? எனக்குள் வாசமாயிருக்கும் **அந்தப் பெரியவரை** ஜெயித்திட அவனால் கூடுமா? என் சுபாவத்தை மாற்றி என்னுள் வாசம் செய்யும் **அந்தப் பெரியவரின்** சுபாவத்தை அவனால் வென்றிட முடியுமா? முடியாது, ஒருக்காலும் முடியாது!".

இவ்வாறு, ஒரு மனிதன் தன் ஆண்டவர் முழுவதுமாய் தன்னை ஆட்கொண்டு நிறைப்பதற்கு, விட்டுக்கொடுத்தால், அவர் அவனை முழுவதுமாய் ஆண்டுகொள்வார்! இவ்வாறாக, உங்களில் அவர்

ஜெயம் பெற்றுவிட்டாரா? அப்படியானால், கிறிஸ்துவாகிய அந்த விலையேறப்பெற்ற 'உங்கள்' பொக்கிஷத்தை எக்காலத்தும் இழந்திடாதிருக்க ஜாக்கிரதை கொண்டிருங்கள்!

நித்தியத்தின் சொல்லிமுடியா பொக்கிஷங்களை ஒருவன் இந்த மண்ணில் நிலையாய் பெற்றிருக்க வேண்டுமென்றால், இப்பூமிக்குரிய வாழ்வில் மனதை வைத்திடாமல், **எளிய ஜீவியத்தைக்** கற்றுக்கொள்வது அவனுக்கு மிகவும் அவசியம். இன்றைய நாகரீக கலாச்சார உலகத்தில் ஒருவன் தன்னை ஆர்வமுடன் ஈடுபடுத்திக்கொண்டு, அதே வேளையில், பக்தியின் தியான வாழ்விலும் ஈடுபடலாம் என எண்ணுவது சுத்த அபத்தம்!

இன்றைய விஞ்ஞானம், அது வழங்கும் சொகுசான வசதிகள், ஆகிய யாவும் ஒருவனுக்குள் செய்திடும் அபாயகரமான தீமை என்னவென்றால் "தானாக சிந்திக்கும் அவனது தெளிந்த புத்தியை அபகரிப்பதுதான்!" நாகரீகம் வழங்கிய சொகுசுகள் "முயற்சித்து ஒன்றைப் பெற்றிடும் வாழ்விற்கு" பெறுத்த இடறலும், அபாயத்தையும் தருவதாகவே உள்ளது. எல்லாம், "ரெடிமேட்" ஆகவும் "முன்கூட்டியே செரித்ததாகவும்" இருக்கிற இந்த வாழ்க்கை, ஒருவன் 'சொந்தமாய்' ஒன்றை பெறுவதற்கு தடைசெய்யும் விபரீதமாய் இருக்கிறது! இந்த நாகரீக வலையில் சிக்கியவனிடம் "மூளைச் சலவை" நாளுக்கு நாள் ஏற்பட்டு, 'உணர்வடையும்' ஆற்றலை அவனை விட்டு அகற்றிவிடுகிறது! இதுபோன்ற நிலைகொண்டவன் வெகு சீக்கிரத்தில் 'சோம்பல்' கொண்டவனாய் மாறுவான் என்பது உறுதி!

**'இம் மண்ணுக்குரிய ஜீவியத்திற்கு சோம்பலை' கொண்டு வந்துவிட்டால் பிசாசுக்கு அதுபோதும் 'ஆவிக்குரிய சோம்பலை' அவன் உள்ளத்தில் கூடைகூடையாய் கொட்டிவிடுவான்! உறுதிபூண்ட தீர்மானங்கள்.... தீர்க்கமான முடிவுகள்.... ஆகிய எதுவும் அவனுக்கு எட்டாத ஒன்றாய் மாறிவிடும்!!**

மேலும், "கிறிஸ்து அவனுக்குள் மகிமையின் நம்பிக்கையாய் ஆட் கொண்டிருக்கும்" பாக்கியத்திற்கே அபாயத்தை கொண்டு வந்து விடும்! நாமோ மிகுந்த எச்சரிக்கையுடையவர்களாய் 'எளிமையை' நாடிட தீவிரம் கொண்டிடக்கடவோம்!

தேவனோடு கொண்ட தனிமைக்கும், தியானத்திற்கும் இன்றைய நாட்களை காட்டிலும் அதிக அவசரமான நாட்கள் இதற்கு முன்பு இருந்ததில்லை! இன்று, அது அத்தனை அவசரமானதாகும்! தேவனோடு அமரவும், அவரது வேத தியானத்தில் நம்மை ஆழ்த்திக்

கொள்வதுமே "**விசுவாசத்தை**" நம் நெஞ்சில் பெற்று வாழ வகை செய்திட முடியும்! நாம் பெற்ற விசுவாசம், பெலனுள்ளதாய் இருந்திட வேண்டுமென்றால், அதை ஏற்றவேளையில் அப்பியாசப்படுத்திட பழகியிருக்கவும் வேண்டும்! தசைநார்கள், இழுத்து விடப்படாவிடில், அது ஒருபோதும் வளர்ச்சி அடையாது!!

இப்போது சொல்லுங்கள், மேற்கண்ட கிறிஸ்தவ வாழ்க்கை நாம் வாழவேண்டிய கிறிஸ்தவ வாழ்க்கையா? அல்லது இதை நீங்கள் "இதுவோர் ஆழமான கிறிஸ்தவ வாழ்க்கை" என 'விசேஷித்து' ஒதுக்குவீர்களா? உங்கள் உள்ளம் தீராத வேட்கை கொண்டு, இந்த வாழ்க்கையை நீங்கள் வாழவில்லையென்றால், கிறிஸ்தவ ஜீவியமே உங்களில் காணப்படாது என்பதை அறிந்து கொள்ளுங்கள்!

ஆகவே, வீறுகொண்டு எழுந்தவர்களாய், உங்கள் தொய்ந்த ஜீவியத்தை, இழுத்து வைத்து கட்டுங்கள்! தேவனுக்காக கொடுங்கள்.... குடும்பமாய் ஜெபியுங்கள்... உங்களை சுற்றிலும் ஏதாவது கடன் இருந்தால் உடன் அதை செலுத்துங்கள்.... துரிதமாய் ஒப்புரவு ஆகுங்கள்.... தனித்து ஜெபித்திடவும்.... வேதத்தில் மூழ்கி தியானித்திடவும் நாடுங்கள்....இவ்வாறு, உங்கள் கிறிஸ்தவம் 'சுறுசுறுப்பாய்' மாறக்கடவது! கடைசியாக, உங்களையே முற்றிலுமாய் தேவ சித்தத்திற்கு அர்ப்பணித்திட எழும்பி நில்லுங்கள்!

கிறிஸ்துவல்லாத எந்த சுபாவத்தையும் உதறித்தள்ளுங்கள். **மற்றவர்கள்** அதை வைத்திருந்தால், அது அவர்களுக்கு இருக்கட்டும்! உங்களுக்கு அது வேண்டாம்! **நீங்கள்** அவரை கிட்டிச்சேர வேண்டுமென்றே தேவன் நோக்கமாய் இருக்கிறார். அதற்காக, யாரையும் குறைகூறவோ குற்றம் சாட்டவோ வேண்டாம்.... நீங்களோ உன்னத பாதைக்கு தீவிரம் கொள்ளுங்கள்! "கிறிஸ்து உங்களுக்கு வேண்டும்!" அது ஒன்றே உங்கள் நோக்கமும் இலக்காயும் இருக்கட்டும். உங்கள் உள்ளத்தில் அவரே தொடர்ந்து வாசம் செய்திட வேண்டும். ஆம், "கிறிஸ்து ஒருவரே" உங்களுக்கு சம்பூரண நிறைவை தந்திட முடியும்!!

உங்கள் இருதயத்தை முற்றிலுமாய் பரிசுத்த ஆவியானவருக்கு அள்ளிக் கொடுத்துவிடுங்கள்! உங்களை அவர் பூரணமாய் ஆண்டு கொள்ளும்படி அவரை கெஞ்சி வரவேற்றிடுங்கள். உங்கள் இதயம் அவரை வரவேற்றிட ஆர்வம் கொண்டிருப்பதை தூய ஆவியானவர் கண்டால், அதை நிறைத்திட அவர் பாய்ந்து வந்து ஆட் கொண்டிடுவார்!

உங்கள் சிலுவை எத்தனை பாரமாயிருந்தாலும், அதை பாக்கியமென கருதி, மகிழ்வுடன் ஏற்று குருவைப் பின்பற்றுங்கள்! மற்றவர்களுக்கு அது எளிதாய் இருக்கட்டும்..... உங்களுக்கு அல்ல! தவறியே ஆயினும், பிறர்மீது உங்கள் சொந்த சிலுவையை வைத்து விடாதீர்கள்! கிறிஸ்து போன்ற இப்பூமியில் 'எளிமை' ஜீவியம் பெற்றவர்களே, மனப்பூர்வமாய் தன் சிலுவை ஏற்பார்கள்! இப்பூமியில் எளிமை ஜீவியத்திற்கு அத்தனை மேன்மையை தேவன் தந்துள்ளார்! இவை அனைத்தும் ஆழ்ந்த ஜீவியம் அல்ல..... நாம் வாழ வேண்டிய கிறிஸ்தவ ஜீவியம்!! ஆமென்.

– *A.W. டோசர்*

---

## 'நதிக்குள் பாய்ந்த சமுத்திரம் போல்' தேவ உறவில் வளர்ந்தேன்!

மறுபடியும் பிறந்த ஒரு கிறிஸ்தவனின் 'ஆவி' தெய்வீக ஆதி நிலைக்கு சங்கமம் ஆகும்படியே விரும்புகிறது! தேவன் மீது வலிமையான வாஞ்சை கொண்ட அவனது ஆவி, தொடர்ச்சியாய் தேவனுடைய கரத்தில் அடங்கியிருந்தால், அவனது வாஞ்சையை, எந்த சத்துவமும் அழித்திட முடியாது. இவ்வித உந்துதலுக்கு தகுதி பெற்றவனின் சரீரமும் ஆவியின் வேகத்திற்கு உயர உயர ஓங்கி வளர்ந்திட ஒத்துழைப்பு தரும்! எனவே, அவனது "**ஆவியின் உந்துதலில்தான்**" வலிமையான வல்லமை அடங்கியிருக்கிறது.

ஆகிலும், இந்த சரீரத்திற்கு தேவன் பூமிக்கடுத்த ஈர்ப்பையும் கொடுத்து சமநிலைப்படுத்துகிறார். ஆகவே, ஆவியின் உந்துதலின் வல்லமையை 'அவர் முன்குறித்த நேரத்தில்' சற்று நிறுத்தி வைத்து தாசர்களை சோதிக்கிறார். இந்த தக்கத்தருணத்தில், ஆவியில் விழிப்புள்ளவனின் சரீரம், தேவனை நோக்கி ஈர்க்கும் ஆர்வம் கொண்டிருக்கிறபடியால், பூமிக்குரிய சரீரத்தின் ஈர்ப்பில் வீழ்ச்சி அடையாமல் நிலை நிற்பான்! இதற்கு மாறாக, போதுமான அளவிற்கு சுத்திக்கரிக்கப்பட்டு தேவனுக்குள் பிரவேசிக்க வேண்டிய அவன், தன்னுடைய மேல்நோக்கிய உந்துதலில் தளர்ச்சி அடைந்தால், அவனது பூமிக்கடுத்த சரீரம் வலிமை பெற்றுவிடும். ஆம், அவன் மீண்டும் மண்ணிற்கே கொஞ்சம் கொஞ்சமாய் திரும்பிவிடுவான்! ஆனால், வளர்ச்சியின் மேல் நோக்கி செல்லும் பரிசுத்தவான்களுக்கு 'மண்ணிற்கு திரும்பும்' தேக்க நிலை ஏற்படுவதில்லை. **இருப்பினும், பரிசுத்தவான்களாய் வாழ்ந்த சிலர், ஜீவியத்தின் முடிவில், 'மண்ணில் வீழ்ந்து' வீழ்ச்சி அடைந்திருக்கிறார்கள்! ஆ, இது துயரம்!**

வீழ்ச்சியின் சரிவில் 'சரீரத்தின் ஆளுகை ஓங்கியப்பிறகு' ஆதியில்

*அவர்கள் கொண்டிருந்த நித்திய ஜீவிய உறவு அவர்களுக்கு தோன்றி மறையும் நிலையற்ற அனுபவமாய் போய்விடுகிறது!*

> **ஒரு கிறிஸ்தவன் ஆவியின் ஆளுகையிலிருந்து, சரீரத்தின் ஆளுகைக்கு இறங்கி வருவது மிகவும் கொடியதாகும். ஆகவேதான், ஆத்துமாவில் தங்கியிருக்கும் சுயம், தொடர்ச்சியான மரணத்திற்கு ஊற்றப்பட்டால் மாத்திரமே, நித்திய தேவனுக்குள் பிரவேசித்து வாழமுடியும் என்பது மிகப்பெரிய சத்தியமாயிருக்கிறது!**

*இந்த ஆவிக்குரிய பிரமாணத்தை, என் சொந்த ஜீவியத்தில் அனுபவித்திருக்கிறேன். நான் எவ்வளவு தூரம் என் ஆத்துமாவை மரணத்திற்கு ஊற்றினேனோ, அவ்வளவு தூரம் என் ஆவி சர்வ வல்லவருக்குள் கரைந்து ஒன்றாகியது! கர்த்தரும், என் ஆவியை அவருக்கென்று அதிக அதிகமாய் ஈர்த்துக்கொண்டார்! ஆரம்ப நிலையில், நானே கர்த்தாவிடம் முன்னேறிச் செல்வதாய் உணர்ந்தேன்.*

> **அது எப்படியெனில், ஒரு நதி, சமுத்திரத்திற்குள்ளாய் கடந்து செல்லும் அனுபவமாய் இருந்தது. ஆனால் உண்மையில், அந்த நதி தன் தன்மையை கொஞ்சம் கொஞ்சமாய் இழந்து, முடிவில் சமுத்திரமும் நதியும் ஒன்றாகிவிடுகிறது!**

*இந்த சமுத்திரத்தின் சகல குணாதிசயங்களும் நதியின் வெள்ளத்தில் பாய்ந்து விட்டது! இவ்வாறாகவே, என் ஆத்துமா தேவனோடு ஒன்றாய் இணைந்ததைக் கண்டேன்! எங்கேயிருந்து என்னை அழைத்தாரோ, அந்த குணாதிசயத்தில், தன் முழு சுபாவத்தையும் எனக்குள் பாய்ந்திடச் செய்தார்!*

*தேவனோடு ஒருமித்த நிலையில் வந்துவிட்ட ஒரு ஆத்துமா, அடைந்திடும் பேரானந்தத்திற்கு அளவேயில்லை. ஏசாயா தீர்க்க தரிசியின் வார்த்தைக்கு ஒப்பாய் "ஓ கர்த்தாவே, உம்மிடத்தில் கிட்டிச் சேர்ந்தவர்கள் மகிழ்ச்சியின் பரவசத்தில் மூழ்கியிருக்கிறார்கள்!" என்ற வாக்கியம் நிறைவேறியதாயிருக்கிறது. இதுபோன்ற அனுபவம் உள்ளவர்களையே, நமது ஆண்டவர் கூறும்போது,* **உங்கள் சந்தோஷத்தை ஒருவனும் பறித்துக்கொள்ள இயலாது!"** *(யோவான் 16:22) என்ற அனுபவமாய் மாறுகிறது. மெய்யாகவே, அந்த அனுபவம் 'ஓர் சமாதான நதிக்குள்' மூழ்கியதைப்போல் இருக்கிறது. இங்குதான் 'இடைவிடாத ஜெபம்' கைகூடி வருகிறது. இவ்வாறாக தொடர்ச்சியாய் ஜெபிப்பதற்கோ அல்லது தொடர்ச்சியாய் அன்புகூருவதற்கோ யாதொன்றும் தடையாய் நிற்க முடிவதில்லை! சாலமோனின் உன்னதப்பாட்டில் மணவாளி கூறுவதைப்போலவே*

*“நான் தூங்கினாலும் என் ஆத்துமா விழித்திருக்கிறது” என்ற அனுபவம் நிஜமாய் மாறுகிறது. நமது உறக்கம் கூட, ஆத்துமாவின் ஜெபத்தை நிறுத்த முடிவதில்லை. இதுவே, சொல்லிமுடியாத சந்தோஷமாய் இருக்கிறது! ஒரு காலத்தில் சொல்லொண்ணா துயரத்தில் இருந்த ஆத்துமா, இப்படியொரு சந்தோஷத்திற்குள் பிரவேசித்திடும் என ஒருவராலும் கற்பனை கூட செய்திட முடியாத அனுபவமாயிருக்கிறது. நான் என்ன சொல்வேன்? என் தரித்திரத்தில் சந்தோஷம்! என் நஷ்டத்தில் சந்தோஷம்! என் ஒற்றுமில்லாமையில் சந்தோஷம்! தேவனே எனக்கு எல்லாமுமாயிருக்கும்போது, சிருஷ்டிக்கப்பட்ட யாதொன்றும் என் சந்தோஷமாய் தோன்றவில்லை! தேவனுடைய திவ்ய மகிழ்ச்சி, அத்தனை ஆனந்தமாய் இருப்பதை ருசித்தேன்!!*

*– மேடம் குயான்*

---

## கிறிஸ்து கட்டும், ஒரே சரீரமான சபை வேண்டும்!

*பரமானந்தமாகிய நான் ஊழியம் செய்து வந்த CSI சபைகளில், அதிக ஜெபத்திற்குப் பிறகு, வெகுகாலமாக எதிர்பார்த்த “சபை ஐக்கியம்” **1947**-ம் வருஷம் செப்டம்பர் மாதம் கைகூடிவந்தது! தாம்பரம் CSI சபை போதகனாயிருந்த எனக்கு, அது சந்தோஷமான காரியமாயிருந்தது. ஐக்கியம் யாவராலும் விரும்பப்படத்தக்கதல்லவா! இந்த நாளில் தென் இந்திய ஐக்கிய சபைகள், மெதடிஸ்து சபைகள், இங்கிலாந்து சபைகள் ஒன்றாகச் சேர்ந்தன. இந்த ஐக்கியம் எப்படிப்பட்டது? இந்த ஐக்கியத்துக்காக உழைத்தவர்கள் ஆண்டவர் ஒற்றுமைக்காக ஜெபித்த வசனங்களை மேற்கோளாக அடிக்கடி வலியுறுத்தி எடுத்துப் பேசினார்கள். நம் இயேசு, பிதாவை நோக்கி :*

> **“பிதாவே, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்க வேண்டும்” என்றும் “நீர் எனக்குத் தந்தவர்கள் நம்மைப்போல் ஒன்றாயிருக்க வேண்டும்” என்றும், “நாம் ஒன்றாயிருக்கிறது போல அவர்களும் ஒன்றாயிருக்க வேண்டும்” என்றும் திரும்ப திரும்பச் சொல்லியல்லவோ ஜெபித்தார்!**

*ஆண்டவர் வேண்டிக்கொண்ட ஐக்கியம் எப்படிப்பட்டது? என்பதில், வேறுபாடுகளை நாம் பகுத்தறிய வேண்டும்! உலகத்தில் ஐக்கிய சங்கங்கள் என, பல உண்டு. அவர்கள் ‘நிர்வகிக்கும் காரியங்களிலேதான் ஐக்கியமே தவிர’ அங்கத்தினருக்குள் அன்போ ஐக்கியமோ இருக்க வேண்டுமென்பது அவசியமல்ல! அதுபோலவே நாமும் சபை ஆளுகை, நிர்வாகம், ஆராதனை ஒழுங்குகள், மற்றும் உபதேச கொள்கைகளில் ஓர் குறுகிய ஐக்கியத்தைத் தேடுவோமானால்,*

ஆண்டவர் செய்த ஜெபத்தை ஆதாரமாக எடுத்து 'ஐக்கியத்தைப்' பேசுவது சரியல்ல. ஆண்டவர் வேண்டிக் கொண்ட ஐக்கியம், அவரது ஜனத்தைப் பற்றியது. "நம்மைப்போல்" "நாம் ஒன்றாயிருக்கிறது போல்" அவர்களும் நம்மில் ஒன்றாயிருக்க வேண்டும்! என்றல்லவா கூறினார்! ஆராதனைகள், கொள்கைகள், மற்றும் தலைமை ஆசாரங்களைப் பற்றி அதில், ஒரு வார்த்தைகூட கிடையாது. **'பிதாவுக்கும் குமாரனுக்குமுள்ள ஐக்கியம்' மகா ஆழமானது, அன்புக்குரியது, ஆவிக்குரியது, ஜீவனைப் போன்றது!** அதேமாதிரி ஐக்கியம், விசுவாசி களான நமக்குள்ளும் உண்டாகவேண்டுமென்பது, இயேசுவின் ஊக்கமான வேண்டுதலாயிருந்தது! இது சொற்பநாளில் ஆகிற காரிய மல்ல! கிறிஸ்துவுக்கும் நமக்குமுள்ள ஐக்கிய அளவுக்கும் தரத்திற்கும் தக்கபடியே, நமக்கும் உடன் விசுவாசிகளுக்குமிடையே ஐக்கிய முண்டாக வேண்டும்! இந்த அன்பின் ஐக்கியத்தையே நாம் பிரதானமாகத் தேட வேண்டும். மற்றப்படி, விருத்தசேதனம் எடுத்த ஆயிரம் சுன்னத்துக்காரர்கள் ஒன்று சேர்ந்தாலும், சுன்னங்களாகவே யிருப்பதுபோல, புறம்பான காரியங்களில் மாத்திரம் நாம் ஐக்கியப் படுவோமானால், அது ஆண்டவர் பார்வையில் ஐக்கியமாகாது!

**ரோம சபைகள், உலகமெங்கும் திரளாய் பெருகியிருக்கின்றன. அவர்களுடைய ஆவிக்குரிய நிலைமை என்னவாயிருந்தபோதிலும், போப்பாண்டவர் தலைமைக்குள் இவைகளிருப்பதால் ஒரே சபை என்றெண்ணப்படுகிறது. இவர்களின் ஒற்றுமை, ஆண்டவர் இயேசு யோவான் 17-ம் அதிகாரத்தில் வேண்டிக்கொண்ட ஒற்றுமையா? இதுபோன்ற 'ஒற்றுமை' தனிமனித ஆராதனை அல்லவா?**

ஆங்கிலேய திருச்சபையைச் சேர்ந்த குருக்களில் ஒரு வகுப்பாருக்கு ரோம சபையோடு சேர்ந்துகொள்ள வெகு ஆசை. இதற்காக இவர்கள் ரோம சபைக் குருக்களைப்போல் உடைகள் உடுத்தி, அவர்களைப்போல் ஆராதனையும் நடத்தினார்கள். அக்காலத்தில் இவர்களுக்கு 'ஆங்கில கத்தோலிக்கர்' என்று பெயர்! ஆனால் போப் ஆண்டவர் சாமிக்கோ, இவர்களைச் சேர்த்துக்கொள்ள துளியும் மனமில்லை.

கத்தோலிக் சபைகளுக்கும் மற்ற சபைகளுக்கும் **கிறிஸ்து ஒருவரே இரட்சகராயிருந்தும்** கத்தோலிக்க சபை பார்வையில், நாம் "பிரிந்து சென்றவர்கள்" என எண்ணப்படுவது எவ்வளவு துயரமான காரியம்! ஆத்மீக விஷயத்தில் இந்துக்களோடாவது நாம் தாராளமாய் கர்த்தரை சம்பாஷிக்கலாம் போலிருக்கிறது. கத்தோலிக் சபைகளோடு சம்பந்தப்படுவது அவ்வளவு கஷ்டமாயிருக்கிறது. சில வருஷங்களுக்கு

*முன் தென் இந்திய ஐக்கிய சபையைச் சேர்ந்த ஓர் ஆலயத்தில், இராப்போஜன ஆராதனை நடந்தபோது, போதகர்களின் உடைகள், நற்கருணைப் பதார்த்தங்கள், அவைகளைப் பரிமாறின முறைகளை நான் கவனித்து: ஆராதனைகள் வெகு சாதாரணமாக நடக்கும் இவ்வாலயத்தில், இந்த மாறுதல்கள் எப்படி வந்ததென்று கேட்க, அவர்கள்: "நாம் இங்கிலாந்து திருச்சபையோடு ஐக்கியமாகும்படி இப்போதே ஆயத்தப்படுகிறோம்" என்றார்கள்!*

**ஆண்டவர் வேண்டிக்கொண்ட தெய்வ ஐக்கியம் எத்தனை மதிப்புடையது? இவர்கள் விரும்பிய 'உடுப்பு ஐக்கியம்' எவ்வளவு கீழ்த்தரமானது?**

*அன்பின் சீஷனான யோவான்: "நீங்களும் எங்களோடே ஐக்கியமுள்ளவர்களாகும்படி, நாங்கள் கண்டும் கேட்டும் இருக்கிறதை உங்களுக்கு அறிவிக்கிறோம்; எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடும் இருக்கிறது" என்றல்லவா ஆணித்தரமாக கூறினார்! வேறே புறம்பான ஆசாரங்கள் கொள்கைகளைப் பற்றி யோவான் ஒன்றுமே பேசவில்லை!*

*'பல சபைகள் சேர்ந்து, தென் இந்திய சபை' என்னும் பெயரால் இன்று அழைக்கப்பட்டு 'ஒன்றாயிருப்பதுபோல் தோன்றினாலும்' சபைகளுக்குள் பல வித்தியாசங்கள் இருக்கத்தான் செய்கிறது. ஆனால், தெய்வ அன்பினால் நிறைந்த தேவ மக்களுக்கு மற்ற விசுவாசிகளோடு ஐக்கியப்படுவது கஷ்டமல்ல! பெந்தெகொஸ்தே நாளில் தேவாவியானவர் இறங்கி சீஷர்களை நிரப்பினபோது, கிறிஸ்துவின் அன்பின் ஜீவனாலே அவர்கள் நிரப்பப்பட்டபடியால், பற்பல வித்தியாசங்களுள்ள திரளான விசுவாசிகள் "**ஒரே இருதயமும் ஒரே மனமும்**" உள்ளவர்களானார்கள். அவர்கள் தேவ அன்பினால் நிறைந்தபடியால், யாதொரு நிபந்தனைகள் இல்லாமலும், கமிட்டிகள் கூடி எப்படி ஐக்கியப்படலாமென்று வருஷக்காலங்களாக விவாதிக்காமலும், நிமிஷத்தில் ஒற்றுமையடைந்தார்கள்! அருமை இரட்சகரின் சிந்தையுள்ள தேவ மக்கள் தாங்கள் எந்தச் சபையைச் சேர்ந்தவர்களாயினும், மற்ற விசுவாசிகளோடு ஐக்கியமாகும்படி எப்பொழுதும் ஆயத்தமாகவே இருப்பார்கள்! ஒரு சபையில் அல்ல, 'பல சபைளிலும்'* **அன்பினால் நிறைந்த மக்களின் ஐக்கிய சபை** *இருக்கவேயிருக்கிறது! அதுவே, மெய்யான தேவன் விரும்பும் கிறிஸ்துவின் ஒரே சரீரமான சபை!*

– பரமானந்தம் ஐயர்

## உத்தம தலைமைக்கு "நாசரேத்தூர் தச்சனல்லவா" நல்ல மாதிரி!

ஒருநாள், ஒரு தச்சனின் உபகரணங்கள் (Tools) அனைத்தும் ஒன்றுகூடி ஒரு மாபெரும் மாநாடு நடத்தியது! சகோதரன் சுத்தியல், நாற்காலியில் கம்பீரமாய் அமர்ந்துகொண்டு, மேஜையைத் தட்டி, அதிகாரத்தோடு பேசிமுடித்து அமர்ந்தார்! உடனே "கசமுச.....கசமுச" என ஏதேதோ ஒருவருக்கொருவர் அந்தக் கூட்டத்தில் பேசிக்கொண்டு 'அதை' அனைவரும் ஆமோதித்ததுபோல் தலைகளை ஆட்டிக் கொண்டனர்! அந்த சலசலப்பில் ஏற்பட்ட தீர்மானம் என்ன வென்றால், "இந்த சுத்தியல் சகோதரன் எப்போதுமே **அதிக சப்தம்** போடுகிறபடியால், அவர் உடனடியாக விலக்கப்பட வேண்டுமென்ற" தீர்மானமேயாகும். தங்கள் தலைவரிடம் அதைச் சொல்ல அவர்கள் சற்று தயங்கினாலும், சற்று தைரியமாய் எழுந்து நின்று தங்கள் தீர்மானத்தை அவரிடம் தெரிவித்துவிட்டார்கள்!

அதைக்கேட்டதும், சற்று ஆவேசமாக எழுந்து நின்ற சகோதரன் சுத்தியல், "ஓகோ, நான் விலக வேண்டுமா? சரி போகிறேன்! ஆனால், நான் விலக வேண்டுமென்றால், அந்த தமர் கருவி-துளையிடும் சகோதரர்களும் உடனே விலகவேண்டும்! பின் என்ன, எப்போ பார்த்தாலும் "சர்......சர்ரென" இவர்கள் துளையிடும் சத்தத்தை மனுஷன் காதுகொண்டு கேட்கமுடியவில்லை!" என புலம்பியது தியாக தலைவன் சுத்தியல்!

இதைக்கேட்ட தமர் கருவி சகோதரர்கள் ஆத்திரத்தோடு எழுந்து "நாங்கள் போக வேண்டும் அப்படித்தானே.... பரவாயில்லை போய்விடுகிறோம்.... ஆனால், இந்த ஸ்குரூ-டிரைவர் சகோதரர்கள் மட்டும் ஒவியமா? சரியான சோம்பேறிகள்.... ஒன்றைச் செய்வதற்கு இவர்களைத் ஞு"திருகு" "திருகு" என திருகி முடிக்கிக்கொண்டல்லவா இருக்க வேண்டியுள்ளது!" என படுகுத்தலாக கேட்டுவிட்டார்கள் நமதருமை, தமர்கருவி சகோதரர்கள்!!

"என்ன சொன்னீர்கள்!" கொதித்துப்போய் எழுந்து நின்றார்கள் ஸ்குரூ-டிரைவர் சகோதரர்கள். "நாங்கள் போய்விட ரெடி! ஆனால், இந்த இழைப்புக் கருவி சகோதரர்களை எங்களால் விட்டுவைக்கவே முடியாது..... எதைச் செய்தாலும் மேலோட்டமான வேலையை மாத்திரமே "உஸ்..... உஸ்" என்று செய்துவிட்டு, **எந்த ஆழமான கடின வேலையும் செய்யாத சொகுசு வாசிகள்!**" என காட்டமாய் கரைந்து பேசினார்கள் ஸ்குரூ-டிரைவர் சகோதரர்கள்!

“எங்களையே குறை சொல்லிவிட்டீர்களா? சரிதான், இதோ இப்போதே வெளியில் போகிறோம்! ஆனால், இங்கு சட்டாம்பிள்ளை சர்வாதிகாரிகள்போல் நீளமாய் ஒய்யாரத்தோடு இருக்கும் இந்த அளவு-ஸ்கேல்கலும் கண்டிப்பாய் வெளியேற வேண்டும்! இவர்களைத் தவிர வேறுயாருமே சரியில்லாததுபோல் மற்றவர் களையே அளந்துகொண்டிருக்கும் இந்த மமதைகள் நம் கண்களில் படவேகூடாது!! போய் தொலைய வேண்டும்!!” என குமுறினார்கள் நமது பிரியமான இழைப்புக் கருவி சகோதரர்கள்!!

சட.....சடவென்று எழுந்துநின்றார்கள் அளவு-ஸ்கேல் சகோதரர்கள்! “துண்டை உதறி தோளில்போட்டுக்கொண்டு சென்றுவிட நாங்கள் சம்மதம்..... ஆனால், இந்த சொதசொதப்பு உப்புத்தாள் சகோதரர்களை ஒருவர்கூட கொஞ்சமும் சகித்துக் கொள்ளவே முடியாது! சுத்த மிஞ்சிப்போன கரடுமுரடான பேர் வழிகள்! **பிறரை உரசு..... உரசு என உரசி ஆத்திரமூட்டுவதே** இவர்கள் பொழப்பு......” என கொட்டித் தீர்த்தார்கள் ஆரருமை அளவுகோல் சகோதரர்கள்!!

சிடு.... சிடு என சீறி எழுந்தார்கள் உப்புத்தாள் சகோதரர்கள்! அப்போது..... யாரோ நடந்துவரும் சப்தம்கேட்டு, அனைவருடைய கண்களும் வாசலை நோக்கிப் பார்த்தன. அவ்வளவுதான் ‘கப்......சிப்பென’ மாநாடு கலைந்து, அவரவர் இடத்தில் போய் அமைதியாய் உட்கார்ந்து விட்டார்கள்!

*ஆம், தச்சன் உள்ளே மெல்ல நடந்துவந்தார். ஒளிசிந்தும் முகத்தோடு, ஓர் ஆட்டுக்குட்டியின் முகம்போன்ற சாந்த சொரூபியாய் உள்ளே வந்தார்! ஓ, இவர்தான் அந்த நாசரேத்தூர் தச்சன் இயேசுவோ.... ஆ, அத்தனை பவ்வியம் அத்தனை கெம்பீரம்!! அமைதியாய், அங்கு தொங்கிக் கொண்டிருந்த தனது தச்சு ஆடை மேலங்கியைப் போட்டுக் கொண்டார். இடுப்பை தனது பின்னல்-கயிற்றினால் நன்றாக கட்டிக்கொண்டார். வேலையைத் துவங்கும்படி தனது தச்சு மேஜைக்கு வந்தார்! அவரது கை தொடர்ந்து செய்த 8-மணி நேர வேலையில் ரம்பத்தை எடுத்தார், தமர் கருவி எடுத்தார், உப்புத்தாள் எடுத்தார், சுத்தியல் எடுத்தார், அளவு-ஸ்கேல் எடுத்தார்.... மாறிமாறி எடுத்து வேலையை முடித்தார்! அந்த தச்சு கூடம் முழுவதும் டம் டம்..... சர் சர்.... உஸ் உஸ் என பல்வேறு சத்தம் வல்லினம், இடையினம், மெல்லினம் என மாறிமாறி ஒலித்து ஓய்ந்தது!! ஆஹா, எத்தனை அருமையான பளபளக்கும் அழகு நாற்காலியை செய்து முடித்து*

*விட்டார்! தன் முகத்தில் வழிந்த வேர்வையைத் துடைத்துவிட்டு, தச்சு ஆடை மேலங்கியை கழற்றி வைத்துவிட்டு, தன் பாதரட்சையை போட்டுக்கொண்டு சற்று களைப்புடன்....... ஆகிலும் கெம்பீரத்துடன் நடந்து சென்றார் அந்த தரம் குன்றா நாசரேத்தூர் தச்சன்!*

*அத்தனை தச்சு உபகரணங்களும், நடந்து சென்றுகொண்டிருந்த தங்கள் தங்கத்தலைவர் தச்சனையும், அவர் முடித்த தரம்கொண்ட நாற் காலியையும் மாறிமாறி பார்த்துக் கொண்டிருந்தனர்! தங்கள் பார்வை யிலிருந்து அவர் மறைந்ததும், ரம்பம், சுத்தியல், உப்புத்தாள், அளவு-ஸ்கேல், தமர் கருவி.... ஆகிய அனைத்து உபகரணங்களும் எழுந்து வந்து, தங்கள் கரங்களை கோர்த்துக்கொண்டு கண்களில் நீர் மல்க....*

**"நாம் அனைவரும் இந்த நமது தலைவன் நாசரேத்தூரானின் உடன் வேலையாட்கள்! நாம் எல்லோருமே அவருக்கு வேண்டும்!!" என நா தழுதழுக்க வியப்புடன் கூறி நின்றனர்!**

*ஆம், தச்சு உபகரணங்கள் ஒருவரையொருவர் குறைகூறியது அனைத்தும் உண்மையாய்கூட இருக்கலாம்! ஆனால், இவர்கள் ஒவ்வொருவரையும் அந்த விந்தை தச்சன் இயேசு, பயன்படுத்திய அழகே அழகு! ஒரு உபகரணத்தைக் கொண்டு அவர் செய்துமுடித்த ஒரு செயலை, வேறு எந்த உபகரணமுமே செய்திட முடியாது என்ற உண்மை அங்கு பளிச்சிட்டது!!*

*நாம் அனைவருமே கிறிஸ்துவின் ஒரே சரீரமாயிருக்கும் வெவ்வேறு அவயவங்களாய் இருக்கிறோம்! எல்லா அவயவங் களுக்கும் வெவ்வேறு தொழில் (ஊழியம்) உண்டு! "நாமோ நம் சரீரங்களை, நமது தங்கத் தலைவன் தச்சன் இயேசுவின் கையில் ஜீவ பலியாக" ஒப்புக்கொடுத்துவிட்டால், அதுவே நாம் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனையாய் இருக்கும்! அவர் நம்மை நேர்த்தியாய் பயன்படுத்தி விடுவார்! அப்போது, நாசரேத்தூர் தச்சனின் புகழை பாரெங்கும் நாம் பறை சாற்றிட முடியும்!! ஆமென் (ரோமர் **12:1-5**).*

*– பக்த சிரோன்மணி*

## 'விருந்தினராக அல்ல' அவரை தலைவராக்கி அர்ப்பணியுங்கள்!

*ஒரு முறை, உலக புகழ்பெற்ற ஒரு வேத பண்டிதரின் மகனைப் பார்த்து ஒரு முக்கியமான கேள்வி கேட்கப்பட்டது! கிறிஸ்தவ சமுதாயத்திற்கே தலைவனாய் தோன்றிய அந்த வேத போதகனின் மகன் சந்தித்த கேள்வி இதுதான்: "உன் அப்பா செய்த பல பிரசங்கங்களில் உன் ஜீவியத்தை தொட்டு உணர்த்திய பிரசங்கப் பகுதி*

*என்ன?"* என்ற கேள்விதான்! அதற்கு அந்த அன்பு மகன், மிக ஆணித்தரமாக உரைத்த பதில் என்ன தெரியுமா?

**"கேளுங்கள், என் ஜீவியத்தை வேரோடு மாற்றியமைத்தது, என் தகப்பனின் பிரசங்கம் அல்ல.... மாறாக, என் தகப்பனார் எங்கள் மத்தியில் வேதத்தின்படி கடைப்பிடித்து வாழ்ந்த அவரது பக்தியான வாழ்க்கையே, என்னை கிறிஸ்துவினிடம் கொண்டு வந்தது!" என மகிழ்ச்சியோடு சாட்சி பகர்ந்தான்!**

*அதற்காக, நீங்கள் வேதத்தை உங்கள் பிள்ளைகளுக்கு போதித்திட தேவையில்லையென்று நான் கூறவில்லை. கண்டிப்பாய், வேதத்தை வாசித்து, தியானித்து, அதை உங்கள் பிள்ளைகளுக்கு விவரித்துப் பேசுங்கள்! 'அதே சமயத்தில்' நீங்கள் விவரித்த வேதவாக்கியங்களை, உங்கள் பிள்ளைகளுக்கு முன்பாக வாழ்ந்து காண்பியுங்கள்!*

**அப்படி வாழ்ந்து காண்பிக்காமல், உங்கள் வேத பண்டிதத்தை உங்கள் பிள்ளைகளுக்கோ அல்லது வேறு யாருக்கோ பிரசங்கிப்பதில் எந்த பயனும் இல்லை! நீங்கள் பிரசங்கித்து விளக்கிய சத்தியங்களை, உங்கள் சொந்த ஜீவியம் மாத்திரமே ஆதாரமாய் நின்று தாங்கிட முடியும்!**

*உங்கள் பிள்ளைகளை கர்த்தருக்கென்று நடத்தும் 'பயிற்சி தளம்' உங்கள் வீடுதான் என்பதை மறவாதீர்கள்! இந்த உண்மையைத்தான் வேதப்புத்தகம் திரும்பத்திரும்ப வலியுறுத்துகிறது. ஆகவே, கிறிஸ்துவையே உங்கள் இல்லத்தின் தலைவராய் மாற்றுங்கள்! இதற்கு நேர்மாறாக, இன்று அனேக வீடுகளில் தொங்கிவிட்டிருக்கும் வாசகம் என்ன தெரியுமா? "எங்கள் உணவு மேஜையில், காணப்படாத 'விருந்தாளி' கிறிஸ்து! எங்கள் ஒவ்வொரு சம்பாஷணைகளையும் 'மௌனமாய்' கவனிப்பவர் கிறிஸ்துவே!" என்ற பெலவீனமான வாசகம்தான்! ஆனால், நான் உங்கள் யாவரையும் வருந்தி கேட்பதெல்லாம்* **"உங்கள் முழு ஜீவியத்தையும் இயேசு கிறிஸ்துவுக்கே அர்ப்பணித்து விடுங்கள்!** *அவர்தான், உங்களுக்காக சிலுவையில் மரித்து, தன் சொந்த இரத்தத்தை உங்கள் பாவங்களுக்காக சிந்தி, உயிரோடு மீண்டும் எழுந்தவர்! ஆகவேதான், இன்று அவர், உங்கள் இருதயத்திற்குள்ளும், உங்கள் வீட்டிலும் பிரவேசித்திட விரும்புகிறார்! இனிமுதல், அவர்தான் உங்கள் சொந்த இருதயத்திற்கும் உங்கள் சொந்த இல்லத்திற்கும் தலைவர்! (விருந்தாளி அல்ல)". ஆம், இயேசுகிறிஸ்து உங்கள் 'தலைவராய்' மாறும்படி நீங்கள் உங்களை, அவரிடம் அர்ப்பணித்துவிட்டால், அவரே உங்களை இனிமுதல் தலைவராய் இருந்து உங்களுக்கு போஷிப்பார்! அவர் தரும் உன்னத போஷாக்கு:* **"தெய்வீக அன்பு கொண்டு" போஷிப்பார்! "தெய்வீக**

**மகிழ்ச்சியினால்"** **உங்களை போஷிப்பார்!** *வீட்டிலுள்ள உங்கள் அனைவருக்கும் போஷிப்பார்! அவர்தரும் இந்த "பரம உணவை" உங்களால் உருவாக்க முடியுமா? ஆகவே, உங்களை முற்றிலுமாய் அர்ப்பணித்து உங்கள் உள்ளத்திற்கும் இல்லத்திற்கும் அவரைத் தலைவராக்குங்கள்! அவரே, உங்களை போஷித்து நடத்துவாராக!*

*– பில்லி கிரஹாம் USA*

---

## "நானேதான் எல்லாம்" அகங்காரம் ஒழியட்டும்!

*நாற்றிசையெல்லாம் 'நானேதான் எல்லாம்!' என முழங்கி*
*நாட்டிய கொம்பின் உச்சியில் நீ அமரும் போதும்!*
*நானே இச்சபைக்கு 'வரப்பிரசாதம்' என எண்ணி*
*நாசூக்காய் உள்ளூர மகிழ்ந்து சுவைத்திடும் போதும்*

*நான் போய்விட்டால் இங்கு வெற்றிடமே! ஆஹா....*
*என உள்ளூர மகிழ்ந்து வானில் பறக்கும் போதும்!*
*"நில், நித்திய உவமானம் கேள்!" என்ற தொனி கேட்டிடுவாய்,*
*இத்தொனி செவிகொடுத்தால், தாழ்த்திடுவாய்! அது நலமே.....*

*எடுத்திடு ஓர் பக்கெட்! நிறைத்திடு தண்ணீரால்!*
*நுழைத்திடு உன் கரத்தை.... பின்பு,*
*இழுத்திடு உன் கரத்தை.... மாற்றமோ ஒன்றுமில்லை!*
*அவ்வளவே வெளியே சென்ற உன்கதியும்!*

*நுழைத்திட்ட உன் கரத்தால், பயன்பட கலக்கிடலாம் ஏராளம்!*
*நன்மை பல செய்து, நாதனுக்கே புகழு சேர்த்திடுவாய்!!*
*நான் இதை நிறுத்திவிட்டால், ஏதெனும் நடந்திடுமோ?!*
*"தண்ணீர், தன் நிலையில் காண்பாய்!" ஆணவம் தவிர்ப்பாய்!*

*கற்றுக்கொள் ஓர் பாடம்..... காலம் கடந்திடும்முன்!*
*கனிவான நன்மைகள் ஏராளம் செய்திடலாம்.....*
*கனிவரம் கொண்டு பயன் ஈட்டி தந்திடலாம்.... அதுவன்றி*
*"நானேதான் எல்லாம்!" அகம்பாவத்தில் மாய்ந்திடாதே!*

*– கிறிஸ்ட்ஸ்லேவ்*

## வனாந்திரத்தில் நீர்த்தடாகம்!

*ஒருமுறை, இஸ்ரவேலை சூழ்ந்து ஒரு கூட்டம் எரிச்சலடைந்தவர்களாய், வழக்காடி, போராடி யுத்தம் செய்கிறவர்களாய் துன்புறுத்தினார்கள் (ஏசாயா 41:11,12). அப்போது, கர்த்தருடைய பணிக்காய், கர்த்தருடைய ஜனத்திற்கு அர்ப்பண ஊழியம் செய்த யாக்கோபு என்னப்பட்ட இஸ்ரவேலின் உள்ளத்தில் பயம் உண்டாயிற்று! இந்த சூழ்நிலையில் பூமியின் கடையாந்திரங்களிலிருந்த மக்கள் 'நாமே ஒருவருக்கொருவர் ஒத்தாசை செய்து' திடன் கொள்ளுவோம் என சூழ்நிலையை எதிர்கொள்ள 'எதிரியை தாக்குவதற்குரிய' ஆயுதங்களைச் செய்திட முற்பட்டார்கள்!*

*ஆனால், இந்த இடுக்கண் நேர்ந்த, தக்க தருணத்தில் கர்த்தர் இடைப்பட்டு "என் தாசனாகிய (ஊழியனாகிய) இஸ்ரவேலே, நான் தெரிந்து கொண்ட யாக்கோபே... உன்னை நான் எடுத்து,* **உன் எல்லையிலிருந்து அழைத்துவந்த என் ஊழியன் அல்லவோ! ...நீ பயப்படாதே!** *நான் உன் தேவனல்லவா? உன்னை நான் பலப்படுத்தி உனக்கு சகாயம் பண்ணுவேன்! என் நீதியின் வலக்கரத்தினால் உன்னைத் தாங்குவேன்! ஆம், உன்மேல் எரிச்சலடைந்து, வழக்காடி, போராடி யுத்தம் செய்கிறவர்களை ஏறிட்டுப்பார்... அவர்கள் இப்போது இல்லாமற் போனார்கள்! கர்த்தராகிய நானே உன் வலக்கையைப் பிடித்து துணை நிற்கிறேன்...." என கர்த்தர் உரைத்தார்! (ஏசாயா 41:8-13).*

*மேலும் கர்த்தர் இஸ்ரவேலின் தாழ்ச்சியையும் கூட மாற்றி அமைத்தார்! இஸ்ரவேலின் துரவுகள், கிணறுகள் தண்ணீர் இல்லாத நிலை ஏற்பட்டு தாகத்தால் நாவு வறண்டபோது "சிறுமையும் எளிமையுமான இஸ்ரவேலே... நான் இப்போதும் உன்னை கைவிடுவதில்லை ... பார், உயர்ந்த மேடுகளில் ஆறுகளையும்... வனாந்திரத்தில்* **நீர் தடாகத்தையும்,** *வறண்ட பூமியை நீர்கேணிகளுமாக்குவேன்" என்றார்!(வச.17,18).*

**இப்படியொரு வல்ல செயலை "மனுஷர் ஒத்தாசையால்" எப்படிச் செய்ய முடியும்? (வச.6). மெய்தான், கர்த்தருடைய கரமே இவ்வித அற்புதம் செய்து முடிக்க பராக்கிரமம் கொண்டது! ஏனெனில், இல்லாதவைகளை 'உண்டு பண்ணுவேன்' என்பது, கர்த்தர் தவிர, யாரால் செய்திட முடியும்?**

*இஸ்ரவேலை அல்லது தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட அவரது ஜனத்தை,* **இஸ்ரவேலின் சபையாகிய "சிறு கூட்டத்தை"** *உற்று நோக்குகிறவர்கள், சிந்தித்து உணர்வதெல்லாம் "இஸ்ரவேலரின் பரிசுத்தரே இவைகள் யாவையும்* **படைத்தார்!"** *(வச.19,20) என உணர்ந்து ஜெய முழக்கம் செய்வார்கள்! ஆமென்.*

*– T. ரத்தினகுமார்*

# டையர்க் வில்லெம்ஸ்

**'குழந்தை ஞானஸ்நானத்தை' மறுத்து உயிர்நீத்தவர்!**



( AD 1569)

அனபேப்டிஸ்ட் என்ற 'உத்தம ஞானஸ்நான குழுவினரோடு' இரட்சிக்கப்பட்ட இளம் வாலிபனான வில்லெம்ஸ் இணைந்தார்! கத்தோலிக்க சபையை விட்டு, இரட்சிக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளை என்ற அங்கீகாரத்தை வில்லெம்ஸ் பெற்றிருந்தார்! கத்தோலிக்கமோ அல்லது புராட்டஸ்டண்ட்டோ வழங்கிய 'குழந்தை ஞானஸ்நானத்தை' அனபேப்டிஸ்ட் என்ற தீவிர வேத பக்தர்கள் மறுத்தனர். ஒருவன் மனந்திரும்பி மறுபடியும் பிறந்த பின்பே, தன் பழைய மனிதனை அடக்கம் செய்திடமுடியும்! என வைராக்கியமாக பிரசங்கித்தவர்களே இந்த 'அனபேப்டிஸ்ட் குழுவினர்.' நெதர்லேந்தில் இருந்த கத்தோலிக்க மார்கத்தாரும், புராட்டஸ்டண்ட் மார்க்கத்தாரும், இந்த அனபேப்டிஸ்ட் குழுவினர் தங்கள் பிரசங்கத்திற்கு விரோதமாக பேசுவதை வெறுத்து, அவர்களை துன்புறுத்தினர்!

1569ம் ஆண்டு வில்லெம்ஸ் மீது ரோமன் கத்தோலிக்க செயல்குழுவினர் கண்வைத்து, அவரை சிறை பிடிக்க முயற்சித்தனர்! 'பலமுறை எச்சரிக்கை விடுத்தும் செவிமடுக்காதவர்' என்ற குற்றத்தின் அடிப்படையில், அவரது வீட்டு மாளிகையில் சிறைபிடிக்கப்பட்டார். அவரோ, பல முடிச்சுகள் போட்ட கயிறு வழியே தப்பி ஓடினார். அதைக் கண்ட ஒரு காவலாளி, அவரை துரத்தினார். வெளியில் பனிப்பாறை கொண்ட குளத்தை வில்லெம்ஸ் தாண்டி சென்ற போது காவலாளி தவறி உள்ளே விழுந்து விட்டார்! திரும்ப ஓடி வந்த வில்லெம்ஸ், அந்த காவலாளியை மீட்க, அவரோ வில்லெம்ஸை கைது செய்தார்!

அஸ்பெரன் என்ற இடத்தில், வில்லெம்ஸ் உயிரோடு எரிக்கப்பட கட்டளை பிறந்தது! அவரை எரித்த சமயம், பெருங்காற்று ஒன்று, அவர் உடலில் பற்றிய தீயை திரும்ப திரும்ப அணைத்துக் கொண்டேயிருந்தது! 'என் ஆண்டவரே, என் தேவனே!' என்ற வில்லெம்ஸின் ஓங்கிய குரல், காற்றில் அடிக்கப்பட்டு, பல மைல்கள் தூரம் பலமாய் ஒலித்தது! மிகுந்த விசுவாச மன தைரியத்தோடு, வில்லெம்ஸ் கடைசியாக தன் ஜீவனை தேவனுக்கு ஒப்புக் கொடுத்தார்!

*- கிறிஸ்துவின் பலிபீட சாட்சிகள்*

## 'நித்திய ஜீவன்' கண்டடைந்தவன், மரணத்திற்கு அஞ்சான்!

பாக்கிஸ்தானின் முன்னாள் பிரதம மந்திரி பூட்டோ, நம் இந்திய நாட்டின் முந்திய பிரதமர் இந்திரா காந்தி அம்மையாரின் கொலை குற்றத்தில் சம்பந்தப்பட்டிருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட கேஹார் சிங் போன்றவர்கள் தூக்கிலிடக் கொண்டு போகப்பட்ட நாளில், மரண பயத்தால் துவண்டு விழுந்து பின்னர் மற்றவர்களால் சுமந்துகொண்டு செல்லப்பட்டுத் தூக்கில் போடப்பட்டவர்களாவார்கள். ஆ, மரணத்தை யார்தான் வரவேற்க முடியும்!

60 இலட்சம் அப்பாவிகளான யூத மக்களையும் மற்றும் அநேக லட்சங்கள் குற்றமற்ற உலக மக்களையும் இரண்டாம் உலகப் போரில் மிருகத்தனமாகக் கொன்று தீர்த்தக் கொடிய சர்வாதிகாரி ஹிட்லரின் மரண நேரம், எத்தனை பயங்கரமானது என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்? இரண்டாம் உலகப்போரில் தன்னுடைய தோல்வி உறுதியாகி விட்டதையும் எதிரிகளிடமிருந்து இனிமேல் தான் எவ்விதத்திலும் தப்பிச் செல்ல முடியாது என்பதையும் கண்டு கொண்ட ஹிட்லர் தன் மனைவியுடனும் அவனுடைய செல்லமான (Pet) நாயுடனும் ஒரு அறை வீட்டில் பிரவேசித்து, சயனைட் என்ற கொடிய விஷம் அருந்தி தற்கொலை புரியுமுன்னர், அந்த கொடியவன் மரணத்திற்குத் தான் இரையாகப் போவதை எண்ணி உலகத் தேசப்படங்கள் தன் மேஜை மீது விரித்திருக்க கூண்டுக்குள் அகப்பட்ட திருட்டு எலியைப் போன்று என்ன செய்யலாம்? உலகத்திற்குள் மறைந்து எங்கே ஓடலாம்? மரணத்தை எப்படி தவிர்க்கலாம்? என்று அங்கலாய்த்து மரணத்தை எண்ணி ஓலமிட்டதை சரித்திரம் நமக்கு மிகவும் தெளிவாகக் கூறுகின்றது. மெய்தான், மரணம் பயங்கரமானது!

ஆனால் முற்றிலும் மாறாகத் தேவ மக்களின் மரணமோ, மகா இனிமையானது! மா மகிழ்ச்சி நிரம்பியது! மரணத்தைக் கண்டு அவர்கள் சற்றும் அச்சம் கொள்ளவே இல்லை. எரிகிற அக்கினி சூளையில் வீசி எறியப்பட்ட சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ ஆகிய மூன்று தேவ பக்தர்கள், சிங்கங்களின் கெபியிலே போடப்பட்ட தானியேல் போன்ற தேவ தாசர்கள், மரணத்தை மட்டற்ற ஆவலுடன் கட்டித் தழுவி முத்தமிட ராஜ கெம்பீர நடைபோட்டுக் கொண்டு கொலை கொடுமையை ஜெயித்து வந்தார்கள்!

பட்டம் பதவி பெற்று பயத்துடன் மரிப்பதல்ல! எளியோனாயிருந்தாலும், மரணத்திற்குப் பின் 'தெய்வத்தோடு சேர்ந்து வாழும்' ஜீவியம் உண்டு என அறிந்தவர்களே, மரணபயம் இல்லாது வாழ்வர். ஓ, வாலிபனே நீ மனந்திரும்பி, 'நித்திய ஜீவன்' தரும் இயேசு இரட்சகரை இன்றே அண்டிக்கொண்டு, அவரை ஏற்றுக்கொள்!

- சுவிசேஷ மலர்

பரலோக பொக்கிஷங்கள்

Published and Owned by MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society.
Printed by SFA Print (P) Ltd., Sivakasi. Editor T.Rathnakumar, Madurai.